**PRIVATE AND CONFIDENTIAL (for members only)**

# AMERICAN MISSION COLLEGE, UDUPPIDDY.

LIGHT DISPELS DARKNESS

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

## 1993 - 11 - 13

**சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு**

கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

**வருடாந்தப் பொதுக்கூட்டத்தில்**

சமர்ப்பிக்கப்படவுள்ள

## நான்காவது

# ஆண்டறிக்கை

## 1992 - 1993

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

1992 — 1993-ம் ஆண்டுகளுக்கான

## தாய்ச்சங்க

## நிர்வாகசபை உத்தியோகத்தர்கள்

தலைவர் : பேராசிரியர் ஆ. துரைராசா

உப தலைவர்கள் : திரு. க. சிதம்பரப்பிள்ளை

கலாநிதி சி. சிறிசற்குணராசா

செயலாளர் : திரு. சி. கனகசபாபதி

உப செயலாளர் : செல்வி சீ. வேலுப்பிள்ளை

பொருளாளர் : திரு. ச. தில்லையம்பலம்

உறுப்பினர்கள் ; திரு. க. சண்முகசுந்தரம்

திரு. தி. யோகசாமி. திரு. வை. மகாதேவன்

திரு. த. இராசரத்தினம், திரு. பொ. வியாகேசு

போஷகர் : திரு. ந. அனந்தராஜ் (அதிபர்)

கணக்குப் பரிசோதகர்: திரு. த. அபூர்வசிங்கம்

1993 — 1994-ம் ஆண்டுகளுக்கான கனடாக் கிளைச்சங்க

## நிர்வாகசபை உறுப்பினர்கள்

தலைவர் : திரு. S. பாலேந்திரன்

உபதலைவர்கள் : திரு. C. கருணைராசா

திரு. K. தியாகலிங்கம்

செயலாளர் ; திரு. V. புவனச்சந்திரன்

உபசெயலாளர் : திரு. V. மகேந்திரராசா

பொருளாளர் ; திரு. M. பாஸ்கரநாதன்

உபபொருளாளர் : திரு. V. சொர்ணலிங்கம்

உறுப்பினர்கள் ; திருவாளர்கள் V. இரவிந்திரராசா,

S. சிறிரங்கநாதன், S. சிவநாதன், V. விஜயரத்தினம்,

S. செல்வகுமார், T. கிருஷ்ணமூர்த்தி

போஷகர் : கலாநிதி T. வசந்தகுமார்

கணக்குப் பரிசோதகர்: திரு. M. மகாலிங்கம்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

# 5-வது வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் : *கல்லூரி விளையாட்டு மைதானம்*

காலம் : **1993-11-13** *சனிக்கிழமை பி. ப.* **2** *மணி*

தலைவர் : **பேராசிரியர் அ. துரைராசா அவர்கள்**

## நிகழ்ச்சிகள்

1. *கடவுள் வணக்கம்*
2. *தலைவர் உரை*
3. *நான்காவது வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை*
4. பொருளாளர் வரவு - செலவு அறிக்கை
5. 1992-08-01 — 93-05-31 வரையிலான ஆண்டறிக்கை
6. *அதிபர் உரை*
7. *புதிய ஆண்டிற்கான உத்தியோகத்தர் தெரிவு*
8. *முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஆராய்தல்*
9. *புதிய ஆண்டிற்கான செயல் திட்டம் தயாரித்தல்*
10. *வேறு விடயங்கள்*
11. *நன்றியுரை*

விசேட நிகழ்ச்சிகள் :

*(அ) மாலை 5 மணி :* **காட்சிக் கால்பந்தாட்டம்**

*அணிகள் ;* கல்லூரி பழைய மாணவர்
*எதிர்*
கல்லூரி ஆசிரியர்கள்

*(ஆ) மாலை 6-30 மணிக்கு*

**"இயல் இசை நாடக விழா"**

அழகியல்-தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தின்
(நுண்கலைப் பிரிவு)

## முதலாவது ஆண்டு நிறைவு விழா

★ *தயவுசெய்து தவறாது சமுகமளிக்கும்வண்ணம் வேண்டுகிறோம்* ★

*உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.*
*பழையமாணவர் சங்கம், உடுப்பிட்டி.*
*1993-11-01.*

சி. கனகசபாபதி
*செயலாளர்.*

# வாழ்த்துச் செய்தி

உடுப்பிட்டி அ. மி கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் 5-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமைப்படுகின்றேன்.

எமது கல்லூரி தரைமட்டமாக்கப்பட்டும் தளபாடங்களும், ஆவணங்களும் முற்றாகச் சேதமாக்கப்பட்டும் தலைதூக்கமுடியாத நிலையுற்றும், இன்று எமது விளையாட்டு மைதானத்தில் இயங்கும் அவலத்தை நேரில் கண்டு பேர்அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். இந் நிலையிலும் இக்கல்லூரி அதிபரதும், ஆசிரியரினதும் அர்ப்பணிப்பையும், தாய்ச் சங்கத்தின் சேவையையும் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். பாராட்டுகின்றேன்.

தாய்ச் சங்கத்தின் சேவை அளப்பரியது. கருதற்கரியது. வார்த்தைகளால் விபரிக்க முடியாதது. 1993-10-24 திகதி நடைபெற்ற தாய்ச் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்திற் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு வழங்கப்பட்டிருந்தது. அன்றைய நிகழ்ச்சியில், உறுப்பினர்களின் நூறு வீத வரவும், கல்லூரி வளர்ச்சிக்கான திட்டங்களை வகுக்கும் பொழுது எவ்வளவு ஆளமாகவும், அவதானமாகவும் நேரத்தையும் பொருட்படுத்தாது செயலாற்றியமையும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. பேருவமையூட்டியது.

எமது தாய்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் தமது அரிய நேரத்தை ஒதுக்கி மாதமொருமுறை நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து வழி நடத்திச் செல்வது எமது கல்லூரி பெற்ற பாக்கியமே. எந்த நேரத்திலும் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய இந்த நேரத்திலே ஏனைய சிரமங்களையும் பாராது கல்லூரிக்கு நீங்கள் ஆற்றும் சேவையை கருதும்போது நாம் ஆற்றும் சேவை கடுகளவானதே.

எமது தாய்ச்சங்க உறுப்பினர்களாகிய நீங்கள் களத்திலே உள்ளவர்கள். காலநேரத்திற்கேற்ப சூழும் இன்னல் இடைஞ்சல்கள் எல்லாவற்றிற்கும் முகம் கொடுப்பவர்கள். ஒவ்வொருவரும் தங்களைப்பற்றியே முற்றுமுழுதாகக் கவனிக்க வேண்டிய இந்த நேரத்திலே, கல்லூரியின் வளர்ச்சியிலும் கரிசனையான கருத்தைச் செலுத்தி' அதன் ஆக்கத்துக்கு அல்லும் பகலும் அயராது உழைப்பதையிட்டு நாம் பெருமிதமடைகின்றோம். பாராட்டுகின்றோம். இந்தச் சொல்லுப் போதியதல்ல. பொருத்தமான சொல்லைக் கண்டுபிடிக்கும் ஆற்றல் எனக்கில்லை. உங்களோடு இணைந்து கருமமாற்றும் பாக்கியம் எமக்கில்லையே என்று கவலைப்படுகின்றோம். எல்லாவற்றிலும் நீங்கள் மேலானவர்களே. உங்களைப்போன்ற ஒரு உந்து சக்தியை விஞ்சுமுந்துசக்தி பிறிதொன்று எமக்கில்லை என்பதோடு நான் அமைகின்றேன்.

**சுப்பிரமணியம் பாலேந்திரன்**

தலைவர்

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம், (கனடா கிளை)

யா. / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

# அதிபர் அறிக்கை — 1993

**எமது பழைய மாணவர் சங்கத்தினரின் வருடாந்த நிகழ்வையும், பொதுக்கூட்டத்தையும் வாழ்த்தி எனது அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.**

**கல்லூரியின் வீழ்ச்சியும் எழுச்சியும்:-**

ஒரு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமிக்க பெருமை வாய்ந்த எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. எஸ். எஸ். செல்லத்துரை அவர்களின் நெறிப்படுத்துகையில் 1970 ஆம் ஆண்டு வரை உன்னத நிலையில் இருந்து வந்த எமது கல்லூரி அதன் பின்னர் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள், கல்வித் திணைக்களத்தின் பாரபட்சமான நடவடிக்கைகள், அரசியல் அனர்த்தங்கள், இராணுவ ஆக்கிரமிப்புக்கள் என்பன காரணமாக அழிந்து, சிதைந்து 1989 வரை தொடர்ச்சியான வீழ்ச்சிப்போக்கின் காரணமாக நலிவுற்று, பொலிவிழந்து பின்னர் 1989 இல் இருந்து திரு. க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றபின்னர், மீண்டும் எழுச்சி பெற்று மிடுக்கோடு நிமிர்ந்து நிற்கும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பெருமைகளையும், குறைகளையும்; பலத்தையும், பலவீனத்தையும் நவில்வதில் தற்போதைய அதிபர் என்ற வகையில் நான் பெருமை அடைகின்றேன்.

**மாணவர்கள்:-**

எமது கல்லூரி ஆண்டு 1 முதல் 13 கலை, வர்த்தக, விஞ்ஞானப் பிரிவுகள் வரை கொண்டுள்ள 1 ஏபி தரப் பாடசாலையாகும். (Type 1 A B) ஆண்டு 1 முதல் 5 வரை 422 மாணவர்களும் ஆண்டு 6 முதல் 11 வரை 670 மாணவர்களும் க. பொ. த. உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகளில் 183 மாணவர்களுமாக 1265 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

**ஆசிரியர்கள்:-**

1993 ஆகஸ்ற் வரை இவர் பதவி உயர்வு பெற்றுச்சென்றுள்ளனர். முன்னாள் அதிபர் திரு. க. சிதம்பரப்பிள்ளை, திரு. எஸ். பி. கந்தசாமி, திருமதி. க. சேனாதிராஜா ஆகியோர்

இளைப்பாறிச்சென்றுள்ளனர். 33 வருடங்கள் பெளதிகவியல் ஆசிரியராகச் சேவையாற்றிய திரு. R. பொன்னம்பலம் அவர்கள் 1993 நவம்பர் மாதம் இளைப்பாறவுள்ளார்.

இவர்களைவிட 1993 ஒக்டோபர் மாதத்தில் பகுதித்தலைவராக 2-ம் தர அதிபரான திரு. க. அருளானந்தம், புவியியல் ஆசிரியராக திரு. ப. மனோகரன் அவர்களும் இக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் தற்போதைய ஆசிரியர் தொகை 42 ஆகும். மேலும் பற்றாக்குறை 10 ஆகும்.

## ஆசிரியர் ஆளணி விபரம்:

| வகுதி | உள்ளது | தேவை | பற்றாக்குறை |
|---|---|---|---|
| அதிபர் | 1 | 1 | — |
| உப அதிபர் | 1 | 1 | — |
| பிரிவுத் தலைவர் | 3 | 4 | 1 |
| **கனிஷ்ட இடைநிலை வகுப்பு:** | | | |
| ஆரம்ப / தமிழ் | 7 | 12 | 5 |
| கணிதம் / விஞ்ஞானம் | 7 | 7 | — |
| ஆங்கிலம் | 2 | 5 | 3 |
| ஏனைய பாடங்கள் | 11 | 11 | — |
| **உயர்தர வகுப்பு:** | | | |
| கலை, வர்த்தக பட்டதாரி | 6 | 6 | — |
| விஞ்ஞானப் பட்டதாரி | 4 ¬ | 5 | 1 |
| | 42 | 52 | 10 |

¬ திரு R. பொன்னம்பலம் 14-11-93ல் இளைப்பாறவுள்ளார்.

**பற்றாக்குறை வகுதி :**

| | |
|---|---|
| தாவரவியல் பட்டதாரி | — 1 |
| 14-11-93 ன் பின்னர் -பௌதிகவியல் பட்டதாரி | — 1 |
| ஆங்கிலம் | — 3 |
| ஆரம்பப் பயிற்சி/தமிழ் | — 4 |
| உடல் கல்வி | — 1 |
| பிரிவுத் தலைவர் | — 1 |
| | 11 |

**சேவை புரியும் நன் மனத்தோர்.-**

ஆரம்ப வகுப்புகளில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக எமது பழையமாணவர் சங்கத்தின் முயற்சியினால் இளைப்பாறிய ஆசிரியர்களான திரு த. இராஜரட்ணம் அவர்களதும் திரு. இ. கந்தவனம் அவர்களதும் சேவை எமது மாணவர்களுக்குப் பயனுடையதாக இருப்பதுடன், ஆசிரியர்களுக்கும் வழிகாட்டியாக உள்ளமை நன்றியுடன் நினைவு கூரத்தக்கது.

**பொதுப் பரீட்சைகள்;-**

தற்பொழுது மாணவர்களின் சித்தியடையும் வீதம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**1992-ம் ஆண்டின் க. பொ. த (சா/த) பரீட்சை;-**

| | | |
|---|---|---|
| தோற்றியோர் | — | 80 |
| சித்தியடைந்தோர் | — | 60 |
| A/L கற்கத் தகுதி பெற்றோர் | — | 34 |
| சித்தி பெற்ற வீதம் | — | 75 % |

**1992-ம் ஆண்டின் க. பொ. த (உ/த) பரீட்சை**
**கலை. வர்த்தகத்துறை :**

| | | |
|---|---|---|
| தோற்றியோர் | — | 15 |
| பல்கலைக்கழக அனுமதித் தகைமை | — | 10 |

**பௌதிக, விஞ்ஞானத்துறை :**

| | | |
|---|---|---|
| தோற்றியோர் | — | 18 |
| பல்கலைக்கழக அனுமதித் தகைமை | — | 7 |

**5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை :**

சித்தியடைந்தோர் — 1992 ஏப்ரலில் 6 1992 ஆகஸ்றில் 3

**வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி ;**

1993-ம் ஆண்டின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

### உடற்பயிற்சிப் போட்டிகள் :

1993 ல் எமது கல்லூரி உடற்பயிற்சிக் குழுவின் 19 வயதுப் பிரிவு அணியினர் கோட்டமட்டத்தில் 1-ம் இடத்தைப் பெற்றுப் பின்னர் யாழ் மாவட்ட மட்டத்தில் 27 பாடசாலைகளுடன் போட்டியிட்டு 3-ம் இடத்தைப் பெற்றனர்.

### உதைபந்தாட்ட அணிகள் :

நீண்ட இடைவெளியின் பின்னர் எமது கல்லூரியில் உதைபந்தாட்ட அணிகள் மிகச் சிறப்பான வெற்றிகளைப்பெற்று, யாழ் மாவட்ட மட்டத்திற்கு தெரிவு [செய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் எமது உதைபந்தாட்ட் அணிகள் யாழ் மாவட்டத்தின் சிறந்த அணிகளாகத் திகழும் என்பதில் ஐயமில்லை

### பண்ணிசைப் போட்டிகள்:

கோட்ட மட்டத்திலும், யாழ் மாவட்ட மட்டத்திலும் நடைபெற்ற பண்ணிசைப் போட்டியில், குழு நிகழ்ச்சி முதலாம் இடத்தையும், தனி நிகழ்ச்சியில் த. சஞ்சீவன் 2-ம் இடத்தையும் பெற்றது.

### சகலகலாவல்லி மாலைப் போட்டி;

1992-ம் ஆண்டின் மாவட்ட மட்டத்திலான போட்டியில் எமது கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது.

### தமிழ்த்தினப் போட்டிகள்:-

வடமராட்சிக் கோட்ட மட்டத்தில் தமிழ்த்தினப் போட்டியில் 1993-ன் நாடகப் போட்டியில் எமது கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது.

### வெளி நிறுவனப் போட்டிகள்:-

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், சன்னதியான் ஆச்சிரமம், கூட்டுறவுச் சங்கம், அன்னை பூபதி பொது அறிவுப் போட்டி, வெள்ளைப் பிரம்பு தினப் போட்டிகள், போன்ற பாடசாலைக்குப் புறம்பான வெளி நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட பா ஓதல், பண்ணிசை, பேச்சு, கலை, இலக்கியப் போட்டிகளில் எமது கல்லூரி மாணவர்கள் பலர் தங்கப்பதக்கங்களையும், பரிசில்களையும், பாராட்டுப் பத்திரங்களையும் பெற்றுள்ளனர்.

போட்டமாதிரி ஒரு சில பொருட்களை மாத்திரமே தந்தார்கள். மேற் கொண்டு இப் பொருட்களை எடுப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு சங்கத்தலைவர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களை பணிவாக கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இக் கல்லூரியில் நூலக வசதியில்லை இதனை நிவர்த்தி செய்ய இக் கல்லூரியின் பழைய மாணவன் திரு. செ' துரைராஜா ( ராஜா ) அவர்கள் மைதானத்திற்கு முன்பாகவுள்ள தனது வீட்டைத் தந்துதவியுள்ளார். இந் நூலகத்திற்கு இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் பல நூல்களை தந்துதவினார். இவர்களுக்கு எமது நன்றிகள்.

ஒரு மாணவனுக்கு வாசிப்பு மிக முக்கியமானது. எமது மாணவர்கள் கூடுதலாக தமிழில்தான் வாசிக்கும் நாட்டம் உண்டு அதனால் அவ்வகையான புத்தகங்கள் எமக்கு கிடைப்பதற்கு பழைய மாணவர்சங்கம் உதவவேண்டும். மேலும் எமது கல்லூரியாழ் இந்துவைப் போன்றோ அல்லது றோயல் கல்லூரி போன்றோ வரவேண்டும் என்று நான் விரும்பவில்லை. எமது கல்லூரியானது பழைய உடுப்பிட்டி அ. மி. கல்லூரியாக வரவேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். எமது கல்லூரியில் நல்ல மாணவர்கள் இருக்கின்றார்கள். நல்ல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். நல்ல பெற்றோர்கள் இருக்கின்றார்கள். ஆகவே எமது கல்லூரி எதிர்வரும் காலத்தில் பழைய நிலையை அடையும் என்று கூறி விடைபெற்றுக் கொண்டார்'

**கனடா கிளைச் சங்கத்தலைவர் உரை :**

அதனைத் தொடர்ந்து எமது கனடாக் கிளைச் சங்கத் தலைவர் திருவாளர் சு. பாலேந்திரன் அவர்கள் சபையோருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு தமதுரையை ஆரம்பித்தார்

உடு. அ மி கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டத்தில் சமூகமளிக்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இங்கு ப. மா. சங்கம் இவ்வளவு சிறப்பாக இயங்கிவருவதை பார்க்கும்போது நாங்கள் தாய்ச் சங்கத்திற்கு செய்யும் உதவி மிகவும் சிறிதாக இருப்பதை அறியக்கூடியதாக உள்ளது. மேலும் தாய்ச்சங்கத்தின் வரவு செலவு அறிக்கையை அனுப்பியதன் பின்னரே எமக்கு கூடிய அங்கத்தவர்களை சேர்க்கக்கூடியதாக இருந்தது என்பதனை இங்கு கூறி வைக்க விரும்புகின்றேன். நாம் கனடாவில் நடாத்தும் ''வானவில்'' நிகழ்ச்சிக்கு அமோக ஆதரவு உண்டு. இடவசதி இன்மையால் நூற்

## சென். ஜோன்ஸ். அம்புலன்ஸ் பிரிவு:-

1992-ம் ஆண்டில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு சிறந்த முதலுதவிப் பயிற்சியைப் பெற்றதுடன் செல்வச் சந்நிதி ஆலயம், வல்லிபுரக் கோயில் உற்சவங்களில் பாதுகாப்பு, முதலுதவிப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ் இலக்கிய மண்றம்:-

மாதாந்த கலை இலக்கிய நிகழ்ச்சிகள், தமிழ்த்தின விழாக்களை ஒழுங்கு செய்து, மாணவர்களின் கலை, பண்பாட்டு வளர்ச்சியில் கவனம் செலுத்துகின்றது.

## இந்து மாமன்றம்;-

கல்லூரியின் சைவ சமய பாரம்பரியத்தைப் பேணுதல், வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் ஓதுதல், விசேட பூசைகள், பண்ணிசை ஆகியவற்றைக் கண்காணித்து வருகின்றது.

1993-லும் நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது இவ்விழாவில் பண்ணிசை, பேச்சு, கட்டுரை, கவிதை, கோலம் போடுதல், மாலை கட்டுதல் ஆகிய போட்டிகளை ஒழுங்கு செய்து வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பெறுமதியான புத்தகங்களைப் பரிசாக வழங்கிவருகின்றது.

## கிறிஸ்தவ மன்றம்:-

இக் கல்லூரியில் மிகக் குறைவான கிறிஸ்தவ மாணவர்களே கல்வி கற்கின்றனர். அவர்களது மத அனுட்டானங்கள், வேதாகமப் பரீட்சைகள், ஒளிவிழா போன்றவற்றை செயற்படுத்த கிறிஸ்தவமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல வருடங்களின் பின்னர் றோமன் சத்தோலிக்க மாணவர்களுக்கான கிறிஸ்தவ பாடம் 1992-ம் ஆண்டில் இருந்து நடைபெறுவதுடன் யாழ் மறைமாவட்ட வேதாகமப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன 3 12-92ல் கல்லூரியில் மிகச் சிறப்பாக ஒளி விழா கொண்டாடப்பட்டது. இவ் விழாவில் கிறிஸ்தவ மாணவர்களும், சைவமாணவர்களும் இணைந்து நிகழ்ச்சிகளை வழங்கியமை சிறப்பாக இருந்தது. இவ் விழாவிற்கு உடுப்பிட்டிப் பிரதேச பங்குத் தந்தைகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

## ஆசிரியர் நலன்புரிக் கழகம்:-

இதில் கல்லூரியின் அதிபர் உட்பட அனைத்து ஆசிரியர்களும் அங்கத்துவம் வகிக்கின்றனர். இக் கழகம் ஒரு குடும்பமாகச் சகோதரத்துவத்துடன் செயல்படுவதற்கு ஒவ்வொரு ஆசிரியரினதும், உணர்வு மிக்க பொறுப்புக்களும், பண்புகளுமே காரணம். வேறு எங்கும் காணமுடியாத புரிந்துணர்வும், நல்லுறவும் எமது ஆசிரியர் கழகத்தில் நிலவுவதாலேயே எமது கல்லூரி கல்விசார் நிகழ்ச்சிகளிலும், இணை பாடவிதான முயற்சிகளிலும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடிகின்றது.

## பாடசாலை அபிவிருத்திச் சபை:-

கல்வி அமைச்சின் 1992-ம் ஆண்டின் சுற்று நிருபத்திற்கமைய கடந்த வருடம் இச்சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது இச் சபையின் செயலாளராக செல்வி. சீ. வேலுப்பிள்ளை சிறப்பாகச் செயலாற்றுகின்றார்.

தற்பொழுது இச் சபையிடம் போதியளவு நிதி வசதியின்மையால், குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியவில்லை. காலப் போக்கில் பெற்றோர், நலன்விரும்பிகளின் ஆதரவு கிடைக்கும் பொழுது துரித அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும்.

## பழைய மாணவர் சங்கம்:-

கல்லூரியின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தும் மற்றுமொரு முக்கிய அமைப்பாகத் திகழ்வது எமது கல்லூரி பழைய மாணவர் சங்கமாகும். பெருமைக்குரிய துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களைத் தலைவராகக் கொண்டிருப்பது எமது கல்லூரிக்கு இரட்டிப்புப் பெருமையாகும்.

கடந்த பல வருடங்களாக கல்லூரி அபிவிருத்திப் பணிகளில் முக்கிய பங்கு வகித்துள்ளது. இச் சங்கம் 1993-ம் ஆண்டிலும் பல உதவிகளை வழங்கி வருகின்றமை நன்றியுடன் நினைவு கூரத்தக்கது.

1. வசதிக்கட்டண ஆசிரியை செல்வி சு. ராகினி, நூலகர் செல்வி க. சரோஜினி ஆகியோருக்கு மேலதிக கொடுப்பனவாக மாதாந்தம் தலா ரூ 500/- வழங்குதல்.

2. 1993-ம் ஆண்டின் பரிசளிப்பு விழாவிற்கு நூல்கள் கொள்முதல் செய்ய ரூ. 12,000/- வழங்கியமை.

3. உதைபந்தாட்ட அணி விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டுச் சீருடைகள் பெற்றுத் தந்தமை.

4. கிறிக்கற் உபகரணங்களைப் பெற்றுத் தந்ததுடன், பயிற்சி, பராமரிப்பு என்பவற்றையும் வழங்குதல்.

5. புலமைப் பரிசில் மற்றும் பொதுப்பரீட்சைகளில் சிறந்த பெறு பேறுகளைப் பெறும் மாணவர்களுக்கு பணப்பரிசில்களை வருடாந்தம் வழங்குதல்.

6. தற்காலிக கொட்டில்கள் திருத்தம் செய்யவும், மேலதிக கொட்டில்கள் அமைக்கவும் ரூபா 15000/- வழங்கியமை. இதனைக் கொண்டு 70அடி X 60அடி அளவில் பகுதி நிரந்தரக் கட்டிடம் ரூபா 26000/-செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

7. வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கென இரண்டு ஈட்டிகளை ( ஜவலின் ) பெற்று வழங்கியமை.

8. பழைய மாணவர் சங்கத்தினரால் 90 அடி X 18அடி அளவில் பகுதி நிரந்தரக் கட்டிடம் போடப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளையின், இங்கு இயங்கும் தாய்ச் சங்கத்துடன் இணைந்து பல முன்னேற்றகரமான செயல் திட்டங்களை மேற்கெண்டு வருகின்றனர் அவர்களுக்கு இக் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

**சஞ்சிகை வெளியீடு;-**

எமது கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் 'அரங்கம்' என்ற அழகிய, கருத்துப் பொதிந்த காலாண்டுக் கையெழுத்துச் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது. இச் சஞ்சிகை எமது இளம் தலை முறையினரின் வாசிப்புத் திறனையும், கலை, இலக்கியப் படைப்பாற்றலையும் ஊக்குவிக்க உதவுகின்றது. இதன் மூன்றாவது இதழ் வெளியீடு 1993-10-12-ம் திகதி கல்லூரியில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் முதன்மை விருந்தினராகவும், முதுநிலை விரிவுரையாளர் திரு. க. சிவலிங்கராஜா M. A. அவர்கள் வெளியீட்டுரையையும் நிகழ்த்தினார். இதில் எழுத்தாளர்களான விவேகி, செம்பியன்செல்வன், திரு நவம் மாஸ்ரர் M.A., திரு கி. நடராசா M.A. ஆகியோர் நூல் ஆய்வுரைகளை மேற்கொண்டனர்.

**வருடாந்த பரிசளிப் விழா:-**

1992-ம் ஆண்டுக்குரிய பரிசளிப்பு விழாவும், பெற்றோர் தின விழாவும் 1993-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இதில் எமது பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும், யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தருமான பேரா சிரியர் அ. துரைராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார், அன்னாரது பாரியார் திருமதி. இராஜேஸ்வரி துரைராஜா அவர்கள் பரிசில்களை வழங்கினார். இதற்கான பணம் ரூபா 12000 /- பழைய மாணவர் சங்கத்தினரால் வழங்கப் பட்டது திரு. பொ. வியாகேசு அவர்கள் ரூபா 1000 /- அன்பளிப் புச் செய்துள்ளார்.

**கண்ணகி சனசமூக நிலையம்;-**

இமையாணன் கண்ணகி சனசமூக நிலையத்தினர் வருடா வருடம் புலமைப் பரிசில் சித்திபெறும் முதல் மூன்று மாணவர்க ளுக்கு ஆயிரம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளனர். புலமைப் பரி சில் சித்தி பெற்று தொடர்ந்து இக் கல்லூரியிலேயே கல்வி கற்கும் மாணவர்களுக்கே இப் பரிசிலை வழங்குமாறு கூறியதன்பேரில் இப் பரிசில் வழங்கப்படுகின்றது. நல்ல பணியொன்றை செய்வதற்கு முன்வந்த கண்ணகி சனசமூக நிலையத்தினரை நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

இது போன்று ஏனைய நிறுவனங்களும் பொது மக்களும் முன்வந்து பரிசில், விளையாட்டு ஊக்குவிப்பு நிதியங்களை இக் கல்லூரியின் பெயரில் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**விளையாட்டு உபகரணங்கள்:-**

கல்லூரியின் தேவை அறிந்து, இக் கல்லூரியின் பாதிப்பின் தன்மையை உணர்ந்து காலத்திற்குக்காலம் விளையாட்டு உபகர ணங்களை வழங்கி வரும் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு த அருணகிரிராஜா அவர்களுக்கு கல்லூரி சமூகத்தின் சார் பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்,

**கீழைத்தேய சங்கீத உபகரணங்கள்:-**

முதல்முதலாக எமது கல்லூரியின் கர்நாடக இசை வளர்ச் சிக்குப் பயன்படுத்துவதற்கென புதிய ஆர்மோனியம், டோலக் கஞ்சம், போன்ற இசைக் கருவிகளை வழங்கியமைக்கு சங்கீத உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. க கணபதிப்பிள்ளை அவர்க ளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**கல்வித் திணைக்களத்தின் பணிகள்:-**

ஆசிரியர் தேவை அறிந்து வசதிகள் கிடைக்கின்ற போது இக் கல்லூரியின் பாதிப்பை உணர்ந்து மேலும் இதனை வளர்க்க வேண்டும் என்ற உணர்வுடன் உதவிகள் புரியும் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களுக்கு எமது நன்றிகள் என்றும் இருக்கும்.

**கல்லூரி எதிர்நோக்கும் பிரச்சனைகள்:-**

**பாடசாலை இட வசதிகள்:**

1265 மாணவர்கள் கற்கும் இக் கல்லூரியில் பல வகுப்புகள் தனியார் வீடுகளிலும். திரு பொ. வியாகேசு அவர்களின் பீக்கோன் கல்வி நிறுவனத்தின் கட்டிடங்களிலும், கல்லூரி மைதானத்திலும் நடைபெற்று வருகின்றன.

கல்லூரிக்கான கட்டிடங்கள் அமைப்பதற்கு இடம் தந்துதவிய திருவாளர்கள் ச. தில்லையம்பலம், கா. நீலகண்டன், சு. சுந்தரலிங்கம், பொ. வியாகேசு ஆகியோருக்கு எமது நன்றிகள்

தனியார் இல்லங்களைத் தந்துதவிய திருமதி க. சேனாதி ராஜா. திரு. எஸ், சொலமன், திரு. சு. சுந்தரலிங்கம், திரு சே. இரவீந்திரன் ஆகியோருக்கும் எமது நன்றிகள். கல்லூரி அலுவலகத்தைத் தந்து. மேலும் பல உதவிகளைச் செய்து வரும் திருமதி சு. சுந்தரலிங்கம் குடும்பத்தினருக்கும் எமது விசேட நன்றிகள்.

**இன்று அமைக்கப்பட்டுள்ள தற்காலிக மண்டபங்களின் விபரம்:**

| வருதி | அளவு | உதவியோர் | இடம் தந்தோர் |
|---|---|---|---|
| | | | திருவாளர்கள்: |
| தற்காலிகமண்டபம் | 75'X16' | புனரமைப்பு '92 | பொ. வியாகேசு |
| ,, ,, | 75'X16' | ,, 1992 | கா. நீலகண்டன் |
| பகுதி நிரந்தர ,, | 35'X20' | பா. அ. ச. 1991 | பொ. வியாகேசு |
| பகுதி நிரந்தரம் | 70'X16' | ப. மாண. சங்கம் | மைதானம் |
| குதி நிரந்தரம் | 90'X18' | ப. மாண. சங்கம் | மைதானம் |
| தற்காலிகமண்டபம் | 35'X16' | அரச புனர. '92 | சு. சுந்தரலிங்கம் |
| தற்காலிகமண்டபம் | 50'X16' | பா. அ. ச. 1990 | மைதானம் |
| விஞ்ஞானகூடம், நூல் நிலையம் மண்டபம் | 65'X16' | அரச புனர. '92 | திரு. ச. தில்லையம்பலம் |
| பார்வையாளர மண்ட | 40'X'14 | — | மைதானம் |

இன்னும் தேவையான கட்டிட விபரம் 100'X'16 அள வில் 4 மண்டபங்கள் தேவை. இதற்கு 1994-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் 100'X 16' அளவில் 2 கட்டிடங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தளபாட விபரம் :**

| பிரிவு | வகை | தேவை | இருப்பது | பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| ஆரம்பம் | பாலர் மேசை | 145 | 104 | 41 |
| | பாலர் கதிரை | 434 | 208 | 82 |
| மேற்பிரிவு | மாணவர் மேசை | 380 | 242 | 138 |
| | மாணவர் கதிரை | 380 | 242 | 138 |
| | கரும்பலகை | 44 | 28 | 16 |
| | ஆய்வுகூட மேசை | 8 | — | 8 |
| | ஆய்வுகூட கதிரை | 24 | — | 24 |
| | நூலக மேசை | 04 | — | 04 |
| | நூலக கதிரை | 32 | — | 32 |
| | ஆசிரியர் மேசை | 44 | 08 | 36 |
| | ஆசிரியர் கதிரை | 44 | 27 | 17 |

தற்போதைய மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இட வசதியும், தளபாடமும் இல்லாதிருப்பது கற்பித்தல் செயற்பாடுகள், ஒழுங்குபேணல் என்பவற்றைப் பாதிக்கின்றதும் குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுகூட உபகர்ணங்கள்;-**

1987-இன் இராணுவ நடவடிக்கையினால் எமது கல்லூரி யின் தரம்வாய்ந்த மூன்று ஆய்வுகூடங்களும் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் வழங்கப்படவில்லை. ஆனால் நீண்ட இடைவெளியின் பின் 1993ம் ஆண்டுக்கு திருகோணமலையில் இருந்து பட்டியல்படுத்தப்பட்ட பாடசாலைகளுக்கென பெருமளவு விஞ்ஞான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் பாதிக்கப்பட்ட எமது கல்லூரிக்கு வழங்கப் படாதது குறிப்பிடத்தக்கது.

கல்வித்திணைக்களத்தின் இத்தகைய பாரபட்சமான நடவ டிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். இந்த விஞ்ஞான உபகரணத் தொகுதியைப் பெற்றுத்தருவதற்கு எமது பழைய மாணவர் சங் கமே உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

**நூல் நிலையம்:-**

பெறுமதி வாய்ந்த பல்லாயிரக்கணக்கான நூல்களைக் கொண்டிருந்த எமது நூலகம் 1987-ல் அழிந்ததைத் தொடர்ந்து இதுவரை ஒரு நூல் நிலையம் அமைக்கப்படவில்லை. தற்பொழுது மைதானத்தின் கிழக்குப்புறம் உள்ள திரு. சி. துரைராஜா என்பவரின் இல்லம் நூலகப் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது. நவம்பர் மாதம் கல்லூரியில் 'நூலக வாரம்' பிரகடனம் செய்யப்பட்டு பெறுமதி வாய்ந்த நூல்நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையை எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டுள்ளது. இதற்கென ஒரு தகுதிவாய்ந்த நூலகர் நியமிக்கப்பட்டு சீராக இயங்க ஆவன செய்யப்பட வேண்டும்.

இறுதியாக பொலிவோடும், செழிப்போடும் ஒரு காலத்தில் பெயருடன் விளங்கிய இக் கல்லூரியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதில் ஆர்வத்துடன் உழைக்கின்ற ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர் சங்கத்தினர், கல்விப் பணிப்பாளர், கல்விக் கழகத்தினர் அனைவருக்கும் இந்த நல் வேளையில் எனதும் எனது பாடசாலைச் சமூகத்தினதும் நன்றிகள் உரித்தாகட்டும். குறிப்பாக இலவசமாக ஆசிரியப் பணிபுரியும் செல்வி. சு. தில்லையம்பலம், செல்வி. ஆ. சியாமளா ஆகியோருக்கும் நன்றிகள்.

விழ விழ எழுவோம் .............. என்பதுபோல் அழிவில் இருந்து சரித்திரம் படைக்கப் புறப்பட்டு விட்டோம் .............. அதன் மூலம் எமது கல்வியின் தரத்தையும், கல்லூரியின் பெருமையையும் மீண்டும் உயர்த்துவோமாக.

அன்புடன்

ந. அனந்தராஜ்

07-11-1993

அதிபர்

*

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப்
# பழைய மாணவர் சங்கத்தின்
# 4-வது வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை

காலம் : **1992-08-30** ஞாயிற்றுக்கிழமை பி. ப **2** மணி

இடம் : கல்லூரி விளையாட்டு மைதானம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மேற்குறித்த நேரத்தில் தலைவர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் தலைமையில், கல்லூரி மாணவர்களின் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பமாகியது. அத்தருணம் தேச விடுதலைக் காக தமது உயிரினை அர்ப்பணித்த மாவீரர்களுக்காகவும், பொது மக்கள் நினைவாகவும் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

அங்கத்தவர்களின் வரவு 40 ஆக இருந்தது. இது வழமை யிலும் பார்க்க முன்னேற்றமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**தலைமை உரை;-**

தலைவரவர்கள் தமதுரையில் இன்று தமிழ்ப்பகுதிகளின் கல்வி மிகமிக நெருக்கடியான சூழ்நிலையில் பல இழப்புக்களின் மத்தி யில் முடிந்தவரை சிறப்புற நடைபெறுவது பாராட்டப்பட வேண் டிய விடயமாகும். மனிதன் மனிதனாக வாழ மனித வளத்தின் மேம்பாட்டிற்கு கல்வி இன்றியமையாத தேவையாகும், எமது கல் விக்கு அரசு பலவகையான நெருக்கடிகளையும், இடர்பாடுகளை யும் பல்வேறு வழிகளில் செய்து கொண்டிருக்கின்றது. இவ்விடர் பாடுகளின் மத்தியிலும் எமது மாணவர்களின் கல்வி செவ்வனே நடைபெறுவதனை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்கு காரணமாய் உள்ள அதிபர், ஆசிரியர்களுக்கு எமது பாராட்டுகள். அவர்களை மேலும் ஊக்குவிக்க வேண்டியது எமது கடமையாகும்.

இன்றைய சூழ்நிலையில் எமது சிறார்களின் கல்வி வளர்ச்சி யில் அக்கறை கொண்டு இங்கு சமூகமளித்திருக்கும் எமது பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள் அனைவர்க்கும் நமது நன்றியறிதலை யும் பாராட்டினையும் தெரிவித்துக்கொண்டார்கள்.

அடுத்து இன்றைய கல்விமுறை இந் நெருக்கடியான கால கட்டத்தில் பேணிப்பாதுகாத்தல் மிக இன்றியமையாததாகும். கல்லூரிகளுக்கு மாணவர்கள் செல்வதால் கல்வியுடன் புற செயல்

பாடுகளும் ஒழுக்கமும் கடைப்பிடிக்கப்படுகின்றது. தனியார் கல்விக் கூடங்களில் கல்விமட்டும் உண்டு என்பதனை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மேலும் மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கிறார்கள். ஆனால் பாடசாலைக்கு செல்வதில்லை. இச் செயலானது அரசின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு சமமானது என்பதனை நாம் எல்லோரும் உணர வேண்டும். இதனை முறியடிப்பதற்கு எமது சங்கம் மட்டுமல்ல இதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய சங்கங்களும் முன்வந்து செயல்பட வேண்டும்.

பாடசாலையை விட்டு வெளியேறும் பொழுது மாணவர்கள் ஏதாவது தொழில் புரியக் கூடிய முறையில் எமது கல்வியமைய வேண்டும். அரச உத்தியோகம் என்ற நிலைமாறி தனியார்கைகளில் வேலைவாய்ப்புக்கள் ஒப்படைக்கும் சூழ்நிலைகள் இங்கு நடைமுறைக்கு வரும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதனை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்நிலைக்கேற்ப நாமும் மாறவேண்டும். ஏழை மாணவர்களின் கல்வி நிலை மிகவும் பரிதாபமானது. வசதி படைத்தவர்கள் கொழும்பு சென்று கற்கும் வாய்ப்புக்கள் உண்டு. இந்நிலையினைச் சமப்படுத்த எமது சங்கம் பாடுபடவேண்டும். எமக்கு சகலவழிகளிலும் உந்து சக்தியாக எமது கடனாக்கிளையினர் விளங்குகின்றனர். அவர்கள் எமக்கு ஊக்கமும், ஆக்கமும் தரக்காத்துக் கொண்டிருக்கின்றனர் எனவே எமது கனடாக்கிளையினரின் உதவிகளை ஆக்கபூர்வமாக பெறுவதற்குரிய செயல்திட்டங்களை நாம் வகுத்துச் செயற்பட வேண்டியது இன்றைய காலகட்டத்திற்கு மிகமிக அவசியமாகும்.

## மூன்றாவது வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை:-

அதனைத் தொடர்ந்து செயலாளரினால் மூன்றாவது வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை சபையில் வாசிக்கப்பட்டு அறிக்கையில் எவ்வித திருத்தமும் இன்மையால் அறிக்கை சரியென திருவாளர் இ. ஜெயபாலன் அவர்களினால் முன்மொழியப்பட்டு திருவாளர் க. சண்முகசுந்தரம் அவர்களினால் வழிமொழியப்பட்டு சபையோரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## கனடாக்கிளைச் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி:-

எமது கனடாக்கிளைச் சங்கத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி த. வசந்தகுமார் அவர்கள் தாய்ச் சங்கத்தினை வாழ்த்தி அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியினை செயலாளர் அவர்கள் சபையில் வாசித்தார்.

**பொருளாளர் வரவு செலவு அறிக்கை:-**

பொருளாளரினால் 1991 யூன் 1-ம் திகதியில் இருந்து 1992 மே 31 -ம் திகதி வரையிலான வரவு செலவுக் கணக்கு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. வரவு செலவுக் கணக்கு சரியென திருவாளர் க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் முன்மொழிய திருவாளர் க. சண்முகசுந்தரம் அவர்களினால் வழிமொழியப்பட்டு சபையோரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஆண்டறிக்கை:-**

அடுத்து 1991-08-01-ல் இருந்து 1992-07-31 வரையிலான செயற்பாடுகள் அறிக்கையாக செயலாளரினால் சபையில் வாசிக்கப்பட்டது.

**அதிபர் உரை:-**

அதனைத் தொடர்ந்து கல்லூரியின் அதிபர் திரு. ந. அனந்தராஜ் அவர்கள் முதற்கண் தமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்திற்கும் சங்க உறுப்பினர்க்கும் நன்றியைக் கூறி தமது உரையைத் தொடங்கினார்.

தற்பொழுது கல்லூரி பெற்றார், ஆசிரியர், மாணவர்களிடையே ஒரு முக்கோணத்திட்டமிட்டு செயற்படுவதன் காரணமாக மாணவர்களின் கல்வி வளர்ச்சியடைந்து வருவதாகவும், அதற்கு உறுதுணையாக இப் பழைய மாணவர் சங்கம் இருப்பதனையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டார்கள்,

அத்தோடு 1972 - 1986 ஆண்டுவரை கல்லூரியின் வீழ்ச்சிக்கு அடிக்கடி இடம்பெற்ற அதிபர்களின் இடமாற்றமே காரணம் எனவும் அதாவது 15 வருடங்களில் 18 அதிபர்கள் மாறியதாகவும் எடுத்துக்காட்டினார்கள். 1986 - 1987 - ல் களில் கல்லூரி அழிக்கப்பட்டு கல்லூரிக்கு இருண்டகாலமாக அமைந்ததெனவும் சுட்டிக்காட்டினார்கள்.

இருந்தும் இவ் இக்கட்டான நிலையிலும் ஆசிரியர் வளம் சிறப்பாக இருப்பதாகவும் ஆனால் மாணவர்களின் வரவு குறைவாக இருப்பதாகவும் குறையினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்கள். அத்தோடு 114 மாணவர்வரை 6 — 9 ஆண்டுவரை சரியாக எழுத வாசிக்கத் தெரியாதவர்களெனவும் அவர்களுக்கென மெல்லக் கற்போர் என ஒரு வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு கௌரவ சேவையாக திரு. த. இராசரத்தினம் ஆசிரியர் அவர்கள் பொறுப்பேற்று நடத்துவதாகவும் குறிப்பிட்டார்கள்.

அத்தோடு ஆய்வுகூடம், நூலகம் போன்ற பௌதீக வளங்களை ஆரம்பிப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் நூலகவாரம் ஒன்று விரைவில் செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள விருப்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

முறைசாராக் கல்வித்திட்டத்தின்கீழ் ஆங்கில வகுப்பிற்கு 48 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும், விரைவில் வகுப்புக்கள் ஆரம்பிக்க உள்ளதாகவும் எடுத்துக் கூறினார். ஈற்றில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து உதவிய திரு பொ. வியாகேசுவுக்கும் பல வழிகளிலும் தாய்ச்சங்கத்தின் ஊடாக எமது கல்லூரிக்கு அளப்பரிய சேவையாற்றிவரும் கனடாக்கிளைச் சங்கத்தினருக்கும் தமது மணமார்ந்த நன்றியைக் கூறி தமதுரையை நிறைவேற்றிக் கொண்டார்கள்.

## சங்க யாப்பில் திருத்த தீர்மானங்கள் மேல் ஆராய்வு:-

1991-12-22 -ம் திகதி நடைபெற்ற எமது நிர்வாக சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கீழ்க்கண்ட தீர்மானம் சபையில் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

''பழைய மாணவர் அல்லாத ஆசிரியர் ஒருவர் எமது கல்லூரியில் தொடர்ச்சியாக ஐந்து ( 5 ) ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வு பெற்றிருப்பின் அவர் உடு. அ. மி. கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் விசேட அங்கத்தவர் ஆவதற்கு தகுதி பெற்றவராவார்."

இத் தீர்மானத்தை பலரும் வரவேற்று தமது கருத்தை தெரிவித்ததுடன் திருவாளர் த. மகாதேவன் அவர்கள் அத்தீர்மானத்தை சரியென முன்மொழிய கலாநிதி சி. சிறிசற்குணராசா அவர்கள் வழிமொழியப்பட்டு சபையோரினால் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதையடுத்து யாப்பில் திருத்தம் செய்யப்பட்டது.

## புதிய நிர்வாகசபை உத்தியோகத்தர் தெரிவு:-

அதனைத் தொடர்ந்து புதிய உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் முகமாக சபை அதிபர் ந. அனந்தராஜ் அவர்களை தற்காலிக தலைவராக நியமித்து அவர்கள் தலைமையில் தெரிவு ஆரம்பமானது.

தலைவர் தெரிவின் போது பேராசிரியர் அ. துரைராஜா அவர்களை திருவாளர் க. சண்முகசுந்தரம் அவர்கள் முன்மொழிய திருவாளர் சி, இராமகிருஷ்ணன் அவர்களால் வழிமொழியப்பட்டு மீண்டும் தலைவராக சபையோரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்

**தெரிவுகள் யாவும் புதிய தலைவர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது**

| பதவி | பிரேரித்து அனுமதிக்கப்பட்டவர் | பிரேரித்தவர் | அனுமதித்தவர் |
|---|---|---|---|
| செயலாளர்; | திரு. சி, கனகசபாபதி | கலாநிதி ரி. சிறிசற்குணராசா | திரு. வை. மகாதேவன் |
| | திரு. க. சிதம்பரப்பிள்ளை | திரு. தி, யோகசாமி | திரு. செ, சூரியகுமார் |
| உபதலைவர்கள் | கலாநிதிச கிறிசற்குணராசா | திரு. க. சண்முகசுந்தரம் | திரு. இ. பொன்னம்பலம் |
| பொருளார் | திரு ச. தில்லையம்பலம் | திரு. செ. சூரியகுமார் | திரு. இ. ஜெயபாலன் |
| உப செயலாளர் : | செல்வி க. வேலுப்பிள்ளை | கலாநிதி சி. சிறிசற்குணராசா | திரு. வை, மகாதேவன் |
| உறுப்பினர்கள்; | திரு. சி. சண்முகசுந்தரம் | செல்வி சி. வேலுப்பிள்ளை | திரு. சி. கனகசபாபதி |
| | திரு. பொ. வியாகேசு | திரு. தி. யோகசாமி | திரு. நா. மகாதேவன் |
| | திரு. தி. யோகசாமி | திரு. வை. மகாதேவன் | திரு. சி. கனகசபாபதி |
| | திரு. வை, மகாதேவன் | திரு. க, சண்முகசுந்தரம் | செல்வி சி. வேலுப்பிள்ளை |
| | திரு, த. இராசரத்தினம் | திரு. இ. ஜெயபாலன் | திரு. ச, தில்லையம்பலம் |
| கணக்காளர் : | திரு, த. அபூர்வசிங்கம் | திரு. க. சிதம்பரப்பிள்ளை | கலாநிதி சிறிசற்குணராசா |

இத் தெரிவுகள் யாவும் சபையோரினால ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**புதிய ஆண்டிற்கான செயற்திட்டங்கள்:-**

பின்வரும் செயற்திட்டங்கள் சபையில் விவாதிக்கப்பட்டு சபையோரினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

01. பொருளாதார வசதி குறைந்த மாணவர்கள் தமது கல்வியை தொடர வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல்.

02. கல்லூரியை விட்டு விலகும் மாணவர்களின் எதிர்கால வளத்தை முன்னிட்டு அவர்களுக்கு தொழிற்கல்வி வழங்குதல்.

**நன்றி உரை:-**

அடுத்து உதவிச் செயலாளர் செல்வி சீ. வேலுப்பிள்ளை அவர்கள் தமது நன்றியுரையில் இறுதி நிகழ்ச்சியாகிய நன்றி நவிலலில் சம்பிரதாய பூர்வமாக இருந்த போதிலும் பல வேலைகள்மத்தியிலும் எமது அழைப்பை ஏற்று இங்குவருகைதந்த அனைவர்க்கும் சபையின் சார்பில் நன்றி செலுத்துவதாகவும், சங்கத்திற்கு உறுதுணையாக நின்று ஆக்கபூர்வமான உதவிகள் புரிகின்ற எமது தலைவர் எவ்வளவோ அளப்பெரும் வேலைகளை ஒதுக்கிவிட்டு இதை நடாத்தி முடித்ததற்காக நன்றி தெரிவித்தார்.

சங்கச் செயலாளர் அவர்கள் தாம் படித்த காலத்தில் எங்ஙனம் இக் கல்லூரி இருந்ததோ அதேபோல் பற்பல நிகழ்ச்சிகளிலும் அகில உலக ரீதியாக பங்குபற்றும் நிலையை உருவாக்க பெரும்பாடுபடுவர். அத்துடன் கூட்டங்களை மாதமொருமுறை நடாத்தி இவ் வருடாந்தப் பொதுக்கூட்டத்தையும் சிறப்புற நடாத்த ஏற்பாடுசெய்தமைக்கும் நன்றியை தெரிவித்தார்.

பொருளாளர் பணத்துடன் மிக்க கவனமாக சிறப்பாக நடாத்தி ஆக்கபூர்வமாக ஒத்துழைப்பு நல்கியமைக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்.

மேலும் எமது அங்கத்தவர் திரு. பொ. வியாகேசு அவர்கள் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்தமைக்கு சங்க சார்பில் ஆசிகளையும், நன்றியையும் தெரிவித்தார்.

மற்றும் எமது வருடாந்த பொதுக்கூட்டம் சன்னதி முருகன் திருவிழாக் காலத்தில் நடந்தாலும் எமது அங்கத்தவர்கள் எமக்கு பூரண ஒத்துழைப்பு நல்கி வருகைதந்து சிறப்பித்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

கல்லூரி மாணவர்கள் கல்லூரிக் கீதம் பாடி மகிழ்விக்கப்போவதற்கு நன்றி தெரிவித்ததோடு எதிர்காலங்களில் எமது சங்க அங்கத்தவர்களே கல்லூரிக் கீதத்தைபடிக்க முயற்சி எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

தேநீர் சிற்றுண்டி முதலியவற்றை எமக்கு அளித்த திருமதி இ. தில்லையம்பலம் மற்றும் பரிமாறிய மாணவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் எமக்கு சகலவகையான ஒத்துழைப்பு நல்கியமைக்கு நன்றி தெரிவித்தார்.

எமது சங்கம் முக்கியமாக எமக்கு நிதியுதவி வழங்கி நாம் சிறப்புற இங்கு இயங்குவதற்கு பூரண ஒத்துழைப்பும், நலாசியும் வழங்கி வரும் எமது கனடா கிளைச் சங்கத்தினருக்கு என்றென்றும் நாம் கடமைப்பட்டுள்ளதுடன் அவர்கள் சிறப்புறச் செயற்பட நல்லாசிகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் இவ் வருடாந்த பொதுக்கூட்டத்தை நிறைவு செய்ய பாடசாலை மாணவர்களுக்கு சவால்விட்டு எந்நேரத்திலும் A. M. C. மாணவர்கள் சளைக்காதவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக காட்சிக் கால்பந்தாட்டப் போட்டியில் ( பாடசாலை மாணவர் எதிர் P. P. A. அங்கத்தவர்கள்) கலந்து கொள்ள இருக்கும் பாடசாலை மாணவர்களுக்கும், பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களுக்கும் தமது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து கல்லூரி மாணவர்களினால் கல்லூரிக் கீதம் இசைக்கப்பட்டு கூட்டம் மாலை 5-00 மணியளவில் இனிதே முடிவுற்றது.

**விசேட நிகழ்ச்சி ;**

அதனைத்தொடர்ந்து விசேட நிகழ்ச்சியாக காட்சிக்கால் பந்தாட்டம், கல்லூரி பழைய மாணவர் குழுவுக்கும் கல்லூரி மேற்பிரிவு மாணவர்களுக்கும் இடையே நடைபெற்றது.

(ஒப்பம்) சி. கனகசபாபதி
செயலாளர்

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

# ஆண்டறிக்கை

**( 1992 - 08 - 01 — 1993 - 05 - 31 வரை )**

தொடர்ந்தும் எமது சங்கத்தின் நான்காவது ( 4 th ) வருடாந்த அறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நீவிர் எம்மீது வைத்துள்ள மதிப்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக எம்மீது சுமத்தப்பட்ட பல பணிகளை முடிந்த வரை கல்லூரியின் வளர்ச்சி கருதி பின்நின்று செயற்பட்டு நிறைவேற்றியுள்ளோம், எந்தப்போர்க்கால சூழ்நிலையில் எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்டதோ அந்தப்போர்க்கால சூழ்நிலை இன்னும் எம் மண்ணைவிட்டு நீங்குவதாக இல்லை இந்நிலையிற்தான் எம்மாற் செயற்பட முடிந்தது அச் செயற்பாடுகளின் வடிவங்களை தங்கள் முன் அறிக்கையாகச் சமர்பிக்கின்றேன்.

**01. அங்கத்தவர்கள் :-**

இக்கால எல்லையில் 10 பேர் ஆயுட்கால அங்கத்தவர்களாக சேர்ந்ததுடன் மொத்த ஆயுட்கால அங்கத்தவர் தொகை 139 ஆகும்.

**02. நிர்வாக சபைக் கூட்டங்கள்--**

மாதாந்தம் குறைந்தது ஒரு நிர்வாகசபைக் கூட்டமேனும் நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் குறித்த கால எல்லையில் 09 நிர்வாக சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. உறுப்பினர்களின் வரவு மிகவும் திருப்திகரமாக இருந்ததுடன் புரிந்துணர்வுடன் தங்கள் பங்களிப்பை நல்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**நிர்வாகசபை அங்கத்தவர்களின் வரவு விபரம் :**

| பெயர் | | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பேராசிரியர் அ. துரைராசா | ... | 09 | 09 |
| கலாநிதி சி. சிறிசற்குணராசா | ... | 09 | 07 |
| திருவாளர் க. சிதம்பரப்பிள்ளை | ... | 09 | 03 |
| ,, க. சண்முகசுந்தரம் | ... | 09 | 03 |
| ,, சி. கனகசபாபதி | ... | 09 | 09 |
| ,, ச. தில்லையம்பலம் | ... | 09 | 09 |
| ,, வை. மகாதேவன் | ... | 09 | 09 |
| ,, தி. யோகசாமி | ... | 09 | 09 |
| ,, த. இராசரத்தினம் | ... | 09 | 09 |
| ,, பொ. வியாகேசு | ... | 09 | 05 |
| செல்வி சீ. வேலுப்பிள்ளை | ... | 09 | 09 |

**03 கனடாக் கிளைச்சங்கம்:-**

1993-03-29-ம் திகதியில் இருந்து திருவாளர் சுப்பிரமணியம் பாலேந்திரன் அவர்களை தலைவராகக் கொண்டு கனடாக் கிளைச்சங்கம் தொடர்ந்தும் திறம்பட இயங்கி வருகின்றது. இக்கிளைச்சங்கம் தாய்ச்சங்கத்திற்கு தேவையான சகல உதவிகளையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அவர்கள் ஆற்றிவரும் சேவைகளில் சில:-

அ) கல்லூரிக்கு தேவைப்படும் மேலதிக ஆசிரியர்களை நியமித்தும் வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கு சகாயப்பணமாக மாதாந்தம் தலா ரூபா 500/-ம் மேலதிகமாக வழங்கியும் வருவது

அதன் பிரகாரம் ஏப்பிரல் 92 இல் இருந்து மே - 93 வரையிலான காலப் பகுதியில் ரூபா 27,000/- ஐ வழங்கியுள்ளதுடன், இதுவரை அவர்கள் இதற்காக வழங்கிய மொத்த தொகை ரூபா 112,000/- ஆகும்,

| காலம் | மாத எண்ணி | அதிபர் தொகை | வீதம் | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 92— ஜுலை-92 | 04 | 3 | 500-00 | 6,000-00 |
| ஓகஸ்ட்— 92 | 01 | 4 | 500-00 | 2,000-00 |
| செப். 92— மே - 93 | 10 | 2 | 500-00 | 10,000-00 |
| ஏப்ரல் 92 — டிசெம்பர் 92 | 09 | 1 | 1000-00 | 9000-00 |
| | | | மொத்தம் | 27,000-00 |

ஆ) வருடா வருடம் க. பொ. த (சா/த), க. பொ. த (உ/த), விளையாட்டுத்துறை ஆகியவற்றிலிருந்து திறமையான மாணவர் ஒவ்வொருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு தலா ரூபா 1000/- வீதம் வருடா வருடம் வழங்கும் பெரு நோக்குடன் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்கில் இடப்பட்ட ரூபா 30,000/- த்தில் இருந்து பெறப்பட்ட வட்டி ரூபா 3,000/-ஐ 1993-02-12-ம் திகதி அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஊக்குவிப்பாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. பரிசு பெற்றோர் விபரம் வருமாறு.

செல்வன் கந்தசாமி சத்தியானந்தன் க. பொ. த. (உ-த) 1990 **2A — 2B**, செல்வன் கந்தையா கோணேஸ்வரன் க. பொ. த. (சா, — த,) 1990 **6D, 2C**, செல்வன் சுப்பிரமணியம் லிங்கேஸ்வரன் சகலதுறைகளிலும் – 1992

இ) இராணுவ நடவடிக்கைகளாலும், பொருளாதார தடைகளாலும் எவ்வித அடிப்படை வசதியும் அற்ற மிக மோசமான சூழ்நிலையில் மாணவர்கள் தமது கல்வியை தொடர்ந்து கற்று 1991-ம் ஆண்டு ஏப்பிரலில் நடந்த க, பொ. த (உ/த)

விசேட பரீட்சையில் தோற்றி சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களின் மனோ திடத்தை கௌரவிக்கும் முகமாக உடுப்பிட்டி அ. மி. கல்லூரி மாணவர்க்கும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கும் தலா ரூபா 3,000 /– வீதம் பொறியியல், மருத்துவம், வர்த்தகம், கலை ஆகிய நான்கு துறைகளில் ஒவ்வொன்றிலும் இருந்து சிறந்த பெறுபேற்றைப் பெற்ற ஒரு மாணவருக்கு மட்டும் வழங்க வேண்டும் என்ற கனடாக் கிளைச்சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய பின்வரும் மாணவர்களுக்கு அந்தந்தக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் வைத்து வழங்கப்பட்டது.

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி — 1992-11-15**

க. பொ. (உ—த)

| பெறுபேறு | துறை | பெயர் |
|---|---|---|
| 2A, 2B | மருத்துவம் | செல்வி கீதா கனகசபாபதி |
| 3A, 1C | முகாமைத்துவம் | செல்வி உமாரதி சண்முகலிங்கம் |
| 1A, 3B | கலை | செல்வி ரகினி சிதம்பரப்பிள்ளை |

**உடுப்பிட்டி அ மி. கல்லூரி 1993-2-12**

க. பொ. த. (உ—த)

| பெறுபேறு | துறை | பெயர் |
|---|---|---|
| 2A 2B | வர்த்தகம் | செல்வன் கந்தசாமி சத்தியானந்தன் |

ஈ) கல்லூரியின் விஞ்ஞான கூடம் நவீனமுறையில் அமைப்பதற்கு தேவையான நிதியின் ஒரு பகுதியாக ரூபா 125,000 /- ஐ இவர்களால் அனுப்பப்பட்ட நிதியில் இருந்து வங்கியில் நிரந்தர வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உ) கிளைச் சங்கத்தின் உதவியுடன் 1992–12–09–ம் திகதி அன்று கிரிக்கெட் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 22,196 /– செலவில் அதற்குரிய உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளதுடன் கிரிக்கெட் மைதானமும் ரூபா 3036–50 செலவில் புணரமைக்கப்பட்டுள்ளது.

மேலும் கிரிக்கெட் பழக்குபவர் ( coach ) ஒருவரும் நியமிக்கப்பட்டு மாதாந்த வேதனமும் வழங்கப்பட்டு வருகின்றது.

| காலம் | வீதம் | தொகை |
|---|---|---|
| டிசெம்பர் 1992 —ஏப்ரல் '93 | ரூ. 1000–00 | ரூ. 4,500-00 |

ஊ) கனடாக் கிளைச்சங்கத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் ரூபா 55,000 /– உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்திற்கு 1992–09–07–ம் திகதி காசோலை மூலம் வழங்கப்பட்டது.

இத் தொகையுடன் இதுவரை அவர்கள் உடுப்பிட்டி மக ளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்திற்கு உதவிப்பண மாக ரூபா 80,000 /- வழங்கியுள்ளார்கள்.

மேலும் முதல் சிநேகபூர்வமான விளையாட்டுப் போட்டி யினை 1993-05-25-ம் திகதி அன்று Hartly College உடன் நடாத்தினர். அன்றைய நிகழ்ச்சியினை கௌரவிக்கும் முகமாக அதில் பங்குபற்றிய சகலருக்கும் மதியபோசன விருந்துபசாரம் வழங் கப்பட்டது.

## 04 சந்தாப்பணம்:-

இக்கால எல்லையில் அங்கத்தவர்களான 10 பேரிடமிருந்து வசூலிக்கப்பட்ட சந்தாப்பணம் ரூபா 1,000 /- ல் இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையில் சேமிப்புக் கணக்கில் ரூபா 500 /- வைப் பிலிடப்பட்டது

எனவே இதுவரை இக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட தொகை ரூபா 13,000 /- ஆகும்.

## 05. கல்வி வளர்ச்சி:-

கீழ்ப்பிரிவு மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை கருத்திற் கொண்டு ஆசிரிய வெற்றிடங்களுக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரி யர்களை நியமிப்பது என்ற தீர்மானத்திற்கமைய இரு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் ஒருவ ரான திருவாளர் த. இராசரத்தினம் ( ஓய்வுபெற்ற அதிபர், கனிஷ்ட பிரிவு ) அவர்கள் கௌரவ சேவை புரிந்து வருகின்றார். அவரது சேவையை எமது சபை கௌரவிக்கின்றது.

## 06. அடிப்படை வசதிகள்:-

அ) உடைந்த கட்டிடத்தில் இருந்த பெறப்பட்ட தளபாடங்களை பாவித்து 70 அடி X 16 அடி அளவு கொண்ட ஓட்டுக் கொட்டகை ( 4 வகுப்பறைகள் ) ரூபா 15,000 /- செலவில் அமைக்கப்பட்டது.

ஆ) மேலும் 90 அடி X 18 அடி அளவு கொண்ட ஓட்டுக் கொட் டகை ஒன்று ( 5 வகுப்பறைகள் ) அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இதற்கு ஏற்படும் செலவு ரூபா 30,000/- என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## 07. பரிசளிப்பு விழா:-

1993-02-12-ம் திகதி அன்று நடைபெற்ற கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 12,000 /- பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டது.

**08. விளையாட்டுத்துறை;-**

நீண்டகாலமாக கல்லூரியில் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு தேவைப்பட்ட ஈட்டிகள் (*Javalins*) இரண்டு ரூபா 2900/- க்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளது

**09. தொழிற்பயிற்சி ( அழகியல் - தொழில்நுட்ப கல்வி நிறுவகம :-**

எமது கல்லூரியை விட்டுவிலகும் மாணவர்களின் நலன் கருதி அவர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கும் நோக்குடன் ''அழகியல் – தொழில்நுட்ப கல்வி நிறுவகம்" அமைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இந் நிறுவகத்தில் ''நுண்கலைப் பிரிவு" ஒன்றினை 1992–10–05–ம் திகதி விஜய தசமி அன்று ஆரம்பிக்கப்பட்டு வாய்ப்பாட்டு வயலின், மிருதங்கம், நடனம் என்பன தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்கப்பட்டு வருகின்றது. இப் பிரிவிற்கு வேண்டிய வாத்தியக் கருவிகள் வாங்குவதற்காக ரூபா 20,000/– வழங்கப்பட்டுள்ளது.

**10. பொது நடவடிக்கைகள்:-**

யாழ் மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையதுதினரின் அழைப்பிற்கிணங்க ''துல்லியம்" நூல் வெளியீட்டு வைபவத்தில் செயலாளர் அவர்கள் 1993-03-10–ம் திகதி பங்குபற்றி முதற் பிரதியை பெற்றுக்கொண்டார்.

**11. ''வானவில் நிதி நிகழ்ச்சி'':-**

எமது கனடாகிளைச் சங்கத்தினர் அந்நிய தேசத்திலிருந்து தமது அரிய நேரத்தை எமது கல்லூரியின் உயர்விற்காகவும், எமது மாணவர்களின் அறிவு, ஆற்றல், ஊக்கத்தை வளர்ப்பதற்காகவும் அர்ப்பணிக்கும் போது இங்குள்ள நாமும் அந்நோக்கத்திற்குரிய பங்களிப்பை நல்க வேண்டும் என்ற பெருநோக்கில் வானவில் நிதிநிகழ்ச்சி ஒன்றினை 1993-09-04 –ம் திகதி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அரங்கில் நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது

**12. கொழும்பு கிளைச்சங்க அங்குரார்ப்பணம்:-**

எமது சங்கத்தின் கொழும்புக்கிளை அங்குரார்ப்பண வைபவம் 1993. ஏப்பிரல் 10-ம் திகதி கொழும்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் எமது சங்கத் தலைவர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் தலைமையில் சிறப்புற நடந்தேறியது.

ஒப்பம்: **சி. கனகசபாபதி**
செயலாளர்.

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய

**1-06-1992** தொடங்கி **31-05-1993** வரைக்குமான கொள்ளல், கெ

| பெறுவனவுகள் | காசு | வங்கி |
|---|---|---|
| 1-6-92 மீதி | | |
| முன் கொண்டு வந்தது | 2741-00 | 39554-25 |
| வங்கி | 10000-00 | |
| கிறிக்கற் பொருட்கள் வாங்கியபின் மீதி | 2804-00 | |
| அங்கத்துவப் பணம் | 1000-00 | |
| தே, சே. வங்கியிலிருந்து எடுத்தது | 3000-00 | |
| பழையமாணவர் சங்கம் (கனடா) | | 215,000-00 |
| ,, ,, ,, | | 356,400-00 |
| | 19545-00 | 610954-25 |

**கொடுப்பனவுகள்**

காசு
வழக்குச் செலவு
நுண்கலைப் பகுதிக்கு
காசோலைப் புத்தகக் கட்டணம்
உடு. மகளிர் பழைய மாணவிக
தே. சே. வங்கி நிலையான
அ. மி. க. 3 மாணவர்களுக்கு
(சிறப்பு
வசதிக் கட்டண ஆசிரியர் சம்ப
உதவியாளர் சம்பளம்
கூட்டங்களில் தேநீர், குளிர்பா
உடு. அ, மி, கல்லூரிக்கு (Java
இல. வங். சே. கணக்கு (அங்.
சிரமதானம் (ஓடு போடல்)
உடு. மகளிர் கல்லூரி சிறந்த பெ
பெற்ற மாணவிக
அ. மி. க, பரிசளிப்பு
கிறிக்கற் போட்டி மதிய உணவு
'துல்லியம்' முதற் பிரதி
வானவில் பதாகைத் துணி
கிறிக்கற் மைதான அமைப்புச்
கிறிக்கற் பழக்குபவர் சம்பளம்
அ. மி. கல்லூரி சிறந்த பெறுபே
பெற்ற மாண
காகிதாதிகள்
92ம் ஆண்டு பொதுக் கூட்ட செ
31-05-92ல்மீதி முன்கொண்டு

## கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

### 31-05-1993 வரைக்குமான கொள்ளல், கொடுத்தல் கணக்கு

| ாசு | வங்கி | கொடுப்பனவுகள் | காசு | வங்கி |
|---|---|---|---|---|
| | | காசு | | 10000-00 |
| 00 | 39554-25 | வழக்குச் செலவு | | 10000-00 |
| -00 | | நுண்கலைப் பகுதிக்கு | | 20000-00 |
| | | காசோலைப் புத்தகக் கட்டணம் | | 150-00 |
| 00 | | உடு. மகளிர் பழைய மாணவிகள் சங்கம் | | 55000-00 |
| 00 | | தே. சே. வங்கி நிலையான வைப்பு | | 115000-00 |
| | | அ. மி. க. 3 மாணவர்களுக்கு (சிறப்புபரிசில்) | 3000-00 | |
| -00 | | வசதிக் கட்டண ஆசிரியர் சம்பளம் | | 27000-00 |
| | 215,000-00 | உதவியாளர் சம்பளம் | | 1000-00 |
| | 356,400-00 | கூட்டங்களில் தேநீர், குளிர்பானம் | 792-50 | |
| | | உடு. அ. மி. கல்லூரிக்கு (Javalins) | | 2900-00 |
| | | இல. வங். சே. கணக்கு (அங். பணம்) | 500-00 | |
| | | சிரமதானம் (ஓடு போடல்) | 595-00 | |
| | | உடு. மகளிர் கல்லூரி சிறந்த பெறுபேறு பெற்ற மாணவிகள் பரிசு | | 9000-00 |
| | | அ. மி. க. பரிசளிப்பு | | 12000-00 |
| | | கிறிக்கற் போட்டி மதிய உணவு | 6913-50 | |
| | | 'துல்லியம்' முதற் பிரதி | | 500-00 |
| | | வானவில் பதாகைத் துணி | | 1000-00 |
| | | கிறிக்கற் மைதான அமைப்புச் செலவு | 3036-50 | |
| | | கிறிக்கற் பழக்குபவர் சம்பளம் | 500-00 | 4000-00 |
| | | அ. மி. கல்லூரி சிறந்த பெறுபேறு பெற்ற மாணவனுக்கு | | 3000-00 |
| | | காகிதாதிகள் | 150-00 | |
| | | 92ம் ஆண்டு பொதுக் கூட்ட செலவுகள் | 1524-50 | 1007-00 |
| | | 31-05-92ல்மீதி முன்கொண்டுசென்றது | 2533-00 | 339397-25 |
| | 610954-25 | | 19545-00 | 610,954-25 |

## வங்கிகளில் நிலையான வைப்புகள் — சேமிப்புக் கணக்குகள் பற்றிய விபரம்

**( 31-05-1993 வரை )**

| | | |
|---|---|---|
| 1. இலங்கை வங்கி (பருத்தித்துறை கிளை) | | |
| ★ அங்கத்துவப் பண சேமிப்பு | | |
| ஆரம்ப மீதி | 12,500-00 | |
| ஆரம்பமீதிக்கான வட்டி | 594-00 | |
| நிகழாண்டு வட்டி | 1,541-28 | |
| காசு (வைப்பு) | 500-00 | |
| இன்றைய மீதி (இறுதி மீதி) | | 15,135-28 |
| ★ இலங்கை வங்கி நிலைய வைப்பு | | 60,000-00 |
| 2. தேசிய சேமிப்பு வங்கி (பருத்தித்துறை கிளை) | | |
| ★ (பரிசுத்திட்டம்) தே. சே. வங்கி நிலையான வைப்பு | | 30,000-00 |
| ★ (ஆய்வுகூடம்) தே. சே. வங்கி | | |
| நிலையான வைப்பு | 750,00-00 | |
| அதற்கு வட்டி | 12,750-00 | |
| சே. முதிர்ச்சியில் | | 87,750-00 |
| ★ தே. சே. வங்கி நி. வைப்பு | | 115,000-00 |
| ★ தே. சே. வங்கி (சேமிப்பு வைப்பு) | | |
| ஆரம்ப மீதி | 5706-26 | |
| வட்டி | 322-00 | |
| | 6028-26 | |
| காசு :டுத்தது | 3000-00 | |
| இன்றைய மீதி இறுதி மீதி | | 3028-26 |

*(Sgd.)* **S. Thillaiyampalam**
*Treasurer*

---

*I have examined the Income and Expenditure Account for the period from 1st of June 1992 to 31st of May 1993 with the books and Accounts of Uduppiddy American Mission College Past Pupils' Association and Certify that the Income and Expenditure Account for the period from 1st of June 1992 to 31st of May 1993 is in Accordance with the books and the information given to me.*

*A. M. College,*
*Uduppiddy,*
*7th Nov. 1993.*

*Sgd.* **T. ABOORVASINGAM**
*Internal Auditor,*
*Past Pupils' Association.*

## அழகியல்-தொழில்நுட்ப நிறுவனத்தின் நுண்கலை பிரிவு
### 1992-06-01 இலிருந்து 1993-05-31 வரையிலான
### வரவு செலவு கணக்கு

வரவு

| | | |
|---|---|---|
| 1. பழைய மாணவர் சங்கம் வழங்கியது | | 20,000-00 |
| 2. மாணவர்களிடமிருந்து வசூலித்தது | ரூ. ச. | |
| (அ) சங்கீதம் | 3,340-00 | |
| (ஆ) நடனம் | 13,055-00 | |
| (இ) வயலின் | 4,725-00 | |
| (ஈ) மிருதங்கம் | 5,765-00 | |
| | | 26,885 00 |
| | மொத்தம் | 46,885-00 |

செலவு

| | | |
|---|---|---|
| 1. உபசரணச் செலவு (தேநீர், சிற்றுண்டி) | | 969-00 |
| 2. எரிபொருள் | | 1,626-50 |
| 3. வேதனம் வழங்கியது | ரூ. ச. | |
| (அ) சங்கீத ஆசிரியர் | 4,000-00 | |
| (ஆ) நடன ஆசிரியர் | 7,072-50 | |
| (இ) வயலின் ஆசிரியர் | 3,750-00 | |
| (ஈ) மிருதங்க ஆசிரியர் | 3,750-00 | |
| (உ) உதவியாளர் | 2,400-00 | |
| | | 20,972-50 |
| 5. உபகரணங்கள் | | 17,485-00 |
| நானாவித செலவு | | 2,164-00 |
| மொத்த செலவு | | 43,217-00 |
| கையிருப்பு | | 3,668-00 |
| | மொத்தம் | 46,885-00 |

1993-08-10

(ஒப்பம்) சி. வேலுப்பிள்ளை
பொருளாளர், நுண்கலைப்பிரிவு.

*I have examined the Income and Expenditure Account for the period from 1st of June - 1992 to 31st of May-1993 with the books and accounts of the Fine Arts of Uduppiddy American Mission College Past Pupils' Association and Certify that the Income and Expenditure Account for the period from 1st of June - 92 to 31st of May - 93 is in accordance with the Books and the informations given to me.*

*Sgd.* **T. ABOORVASINGAM**
*(Internal Auditor of Past Pupils' Association)*

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

# அழகியல்-தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின்
(நுண் கலைப் பிரிவு)

## முதலாவது ஆண்டு நிறைவு

# ★ இயல், இசை விழா ★

தலைவர் :

## பேராசிரியர் அ. துரைராசா அவர்கள்

(யாழ். பல்கலைக் கழக உபவேந்தர்)

காலம்; **1993-11-13** சனிக்கிழமை மாலை 6-30 மணி

இடம் : கல்லூரி மைதான அரங்கம்

## நிகழ்ச்சி நிரல்

6-30 மணி : மங்கள விளக்கேற்றல்

★ தமிழ்த்தாய் வணக்கம்

★ கல்லூரி கீதம்

★ ஆசியுரை : திரு. ந அனந்தராஜ்
(கல்லூரி அதிபர்)

7-00 மணி : **இசை நிகழ்ச்சி** (நுண்கலைப் பிரிவு மாண.)

ஆசிரியர் : **இசைக்கலைமணி**
செல்வி விமலாதேவி வியாகேசு

7-30 மணி : ★ தலைமையுரை ★ வரவேற்புரை

8-00 மணி ; ★ **மிருதங்க இசை** (நுண்கலைப்பிரிவு மாணவர்கள்)

ஆசிரியர் : திரு. த. பார்த்திபன்

8-30 மணி : ★ **நாட்டிய நிகழ்ச்சி**
நுண்கலைப்பிரிவு, மாணவிகள்)

ஆசிரியர் : பரதசூடாமணி செல்வி பேரின்பநாயகி சிவகுரு

10-30 மணி : ★ **இன்னிசைக் கச்சேரி**

(பழைய மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் இணைந்து)

10-45 மணி — நன்றியுரை

ஸ்ரீ வாணி அச்சகம்-உடுப்பிட்டி